M A S T E R   C O P Y

| | | |
|---|---|---|
| Question Booklet Series **M**<br>வினாத் தொகுப்பிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை : **56**<br>No. of pages in Question Booklet : | **ZX-25** | Question Booklet Serial No. |

1. தேர்வு எண் (தேர்வு அனுமதி சீட்டில் உள்ளவாறு)
   Roll No. (As in Hall ticket)
2. பாடம்
   Subject **Computer Science** Subject Code **ZCSX2**
3. OMR விடைத்தாள் எண் (விண்ணப்பதாரரே நிரப்ப வேண்டும்)
   OMR Answer Sheet No. (To be filled in by the candidate)
4. விண்ணப்பதாரரின் பெயர் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)
   Candidate's Name (As given in Application form)
5. விண்ணப்பதாரரின் கையொப்பம் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)
   Candidate's Signature (As given in Application form)
6. கண்காணிப்பாளரின் கையொப்பம்
   Invigilator's Signature

இந்த வினாத்தாளில் 180 கொள்குறி வகை வினாக்கள் உள்ளன. இந்த வினாத்தொகுப்பானது இரு பகுதிகளைக் கொண்டது. **பகுதி–'A'**-வில் 30 வினாக்கள் உள்ளன. வினா எண் 1 முதல் 20 வரை இரண்டு மதிப்பெண் வினாக்களும், 21 முதல் 30 வரை ஒருமதிப்பெண் வினாக்களும் கொண்டுள்ளது. **பகுதி–'B'** 150 ஒரு மதிப்பெண் வினாக்களைக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்படமாட்டாது.

This booklet contains 180 multiple choice questions. This Question Booklet is made up of 2 Parts. Part 'A' contains 30 questions (Q. No. 1 to 30). Q. No. 1 to 20 is of 2 marks each. Question No. 21 to 30 is of 1 mark each. Part 'B' contains 150 questions (Q. No. 31 to 180). Each question is of 1 mark each. There is no negative marking for wrong answer.

அரசாணை (நிலை) எண் 49, மனிதவள மேலாண்மை (எம்)த் துறை நாள் 23.05.2022 -ன்படி மாற்றுத் திறனாளிகள் கட்டாய தமிழ் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

As per G.O. (Ms) No. 49, Human Resources (M) Department, dated 23.05.2022 differently abled candidates are exempted from the Compulsory Tamil Language eligibility test.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட கால அளவு | பொதுத் தேர்வர்கள் | 210 நிமிடங்கள் |
| | மாற்றுத்திறனாளி தேர்வர்கள் | 240 நிமிடங்கள் |
| Allotted time | General candidates | 210 minutes |
| | Differently abled candidates | 240 minutes |

(இறுதிப் பக்கமான பக்கம் எண் **55, 56** ல் தரப்பட்டுள்ள தமிழ் மற்றும் ஆங்கில வழி குறிப்புகளைப் படிக்கவும்)

SPACE FOR ROUGH WORK

## PART - A

1. ‘எற்பாடு’ என்பது :
   (A) பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
   (B) முன்பனிக்காலம்
   (C) ஞாயிறு மறையும் நேரம்
   (D) காலை 6 மணி முதல் 10 மணி வரை

2. **கூற்று (1) :** வலிமையை நிலைநாட்ட நடைபெற்ற போரில் வெற்றி பெற்ற அரசர் தும்பைப் பூவைச் சூடி மகிழ்வர்.
   **கூற்று (2) :** வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பகையரசர்கள் இருவர் தத்தம் வலிமையை நிலைநாட்ட வாகைப் பூவைச் சூடி மகிழ்வர்.
   (A) **கூற்று (1), (2)** இரண்டும் சரி
   (B) **கூற்று (1), (2)** இரண்டும் தவறு
   (C) **கூற்று (1)** சரி, **கூற்று (2)** தவறு
   (D) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** சரி

3. அகவற்பாவுக்குப் **பொருந்தாத** நூலைத் தேர்க.
   (A) மணிமேகலை
   (B) சிலப்பதிகாரம்
   (C) பெருங்கதை
   (D) நாலடியார்

4. கொற்கையின் அரசனாகவும், புலவராகவும் இருந்தவர் :
   (A) செங்குட்டுவன்
   (B) நெடுஞ்செழியன்
   (C) கீரந்தையார்
   (D) அதிவீரராம பாண்டியர்

5. கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினம் :
   (A) பெண் விடுதலையைப் பின்னணியாகக் கொண்டது.
   (B) பழந்தமிழர் பண்பாட்டினை மையமாகக் கொண்டது.
   (C) விளிம்புநிலை மக்கள் வாழ்வை மையமாகக் கொண்டது.
   (D) இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டது.

6. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று அளித்த உணவாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் உணவு :
   (A) தினைச் சோறு
   (B) குழல் மீன் கறி
   (C) தேனும் தினைமாவும்
   (D) ஊன் சோறு

7. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | காலக்கணிதம் | (i) | கீரந்தையார் |
| (b) | மேகம் | (ii) | அதிவீரராம பாண்டியன் |
| (c) | காசிக்காண்டம் | (iii) | கண்ணதாசன் |
| (d) | பரிபாடல் | (iv) | நாகூர்ரூமி |

   (A) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
   (B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
   (C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
   (D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

**8.** கண்ணிற்குக் காட்சி தராமல் அரியனவாய் இருக்கும் மலரைத் தேர்க.

(A) நெருஞ்சி மலர்

(B) பூளை மலர்

(C) பலா மலர்

(D) கள்ளி மலர்

**9.** 'வானம் வசப்படும்' என்ற பிரபஞ்சனின் படைப்பு :

(A) கவிதை நூல்

(B) வரலாற்றுப் புதினம்

(C) சிறுகதைத் தொகுப்பு

(D) சூழலியல் கட்டுரை

**10.** 'உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு

- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள பண்புத் தொகைச் சொல்லைத் தேர்க.

(A) ஊழி ஊழ்

(B) உந்து வளி

(C) ஊழியும்

(D) செந்தீ

**11.** ''இல் நுழை கதிர்'' என்னும் சொல்லின் பொருளினைத் தேர்ந்தெடுக்க.

(A) இல்லத்துள் நுழையும் விளக்கின் ஒளிக்கற்றை

(B) இல்லத்துள் நுழையாத விளக்கின் ஒளிக்கற்றை

(C) இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக்கற்றை

(D) இல்லத்துள் நுழையாத கதிரவனின் ஒளிக்கற்றை

**12.** ''உனக்குப் படிக்கத் தெரியாது''

- என்ற நூல் யாரை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

(A) மருத்துவர் முத்துலெட்சுமி

(B) மேரி மெக்லியோட் பெத்யூன்

(C) கமலாலயன்

(D) மிஸ் வில்ஸன்

**13.** கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றவர் :

(A) கம்பர்

(B) சீத்தலைச் சாத்தனார்

(C) இளங்கோவடிகள்

(D) வீரமாமுனிவர்

**14.** ''பெண்ணினைப் பாகம் கொண்ட
பெருந்தகைப் பரமயோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன்
கேட்டு வானோர்''

- இவ்வடிகளில் பாண்டியனைக் குறிக்கும் சொல்லைத் தேர்க.

(A) பரமயோகி

(B) மீனவன்

(C) பெருந்தகை

(D) வானோர்

**15.** மாறன் தன் நண்பன் இனியனிடம் ''இந்த மாறன் ஒரு நாளும் நேரம் தவறமாட்டான்'' என்று கூறுவது :

(A) மரபு வழுவமைதி

(B) கால வழுவமைதி

(C) இட வழுவமைதி

(D) பால் வழுவமைதி

16. அரசனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணையைப் பாடுவது :

(A) பெருந்திணை

(B) வாகைத் திணை

(C) பொதுவியல் திணை

(D) பாடாண்திணை ✓

17. இலையின் பெயரைக் குறிக்காத சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) தாள்

(B) கழை ✓

(C) ஓலை

(D) தோகை

18. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வீசு தென்றல் | (i) | பண்புத் தொகை |
| (b) | நன்மொழி | (ii) | உம்மைத் தொகை |
| (c) | அண்ணன் தம்பி | (iii) | இருபெய-ரொட்டுப் பண்புத் தொகை |
| (d) | சாரைப் பாம்பு | (iv) | வினைத் தொகை |

(A) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)

(B) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(C) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii) ✓

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

19. 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' என்னும் உரிப்பொருளுக்குரிய திணை :

(A) நெய்தல் ✓

(B) குறிஞ்சி

(C) பாலை

(D) மருதம்

20. கால வழுவமைதியைத் தேர்க.

(A) இந்த மகிழன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான்.

(B) தமிழினி இரவு சோறு உண்டான்.

(C) வீட்டில் காகம் கத்தினால் உறவினர் வருவர்.

(D) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். ✓

21. 'வேம்பு, ஆமணக்கு' இவற்றைக் குறிக்கும் சொல் :

(A) கூலம்

(B) முத்து ✓

(C) விதை

(D) முதிரை

22. பாவலரேறுவால் பாடப்பட்டுத் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது ?

(A) நூறாசிரியம்

(B) மகபுகு வஞ்சி

(C) உலகியல் நூறு

(D) திருக்குறள் மெய்ப்பொருளுரை ✓

**23.** எதிர்மறைத் தொழிற்பெயரைத் தேர்க.

(A) வாழ்க்கை

(B) நடவாமை

(C) ஈதல்

(D) காட்சி

**24.** பொதுமொழியைத் தேர்க.

(A) கண்ணன்

(B) படித்தான்

(C) வேங்கை

(D) மலர்

**25.** 'விருந்தே புதுமை' - என்றவர் :

(A) தொல்காப்பியர்

(B) இளங்கோவடிகள்

(C) கம்பர்

(D) திருவள்ளுவர்

**26.** 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் மு. கருணாநிதிக்கு வழங்கப்பட்ட விழா :

(A) 'பழநியப்பன்' நாடகப் பாராட்டு விழா

(B) செம்மொழி மாநாட்டு விழா

(C) தூக்கு மேடை நாடகப் பாராட்டு விழா

(D) பராசக்தி வெற்றி விழா

**27.** வடமொழிக் கதையைத் தழுவி எழுதப்-பட்ட நூல் :

(A) சீவகசிந்தாமணி

(B) சிலப்பதிகாரம்

(C) மணிமேகலை

(D) பெரியபுராணம்

**28.** **கூற்று (1) :** ஆசிரியப்பா ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**கூற்று (2) :** இரண்டடி முதல் பன்னிரண்டு அடிவரை அமைவது ஆசிரியப்பா ஆகும்.

(A) **கூற்று (1), (2)** இரண்டும் சரி

(B) **கூற்று (1)** சரி, **கூற்று (2)** தவறு

(C) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** சரி

(D) **கூற்று (1), (2)** இரண்டும் தவறு

**29.** இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலின் ஆசிரியர் :

(A) பாரதிதாசன்

(B) அம்பேத்கர்

(C) அயோத்திதாசர்

(D) எம்.ஜி. இராமச்சந்திரன்

**30.** சங்ககாலப் பெண்களைப்போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றவர் :

(A) பாரதியார்

(B) திரு.வி.க

(C) கவிமணி

(D) அயோத்திதாசர்

## PART - B

**31.** The decimal equivalent of $(143)_8$ is :

(A) $(50)_{10}$

(B) $(72)_{10}$

(C) $(36)_{10}$

(D) ✓ $(99)_{10}$

**31.** $(143)_8$ என்ற எண்ணிற்கு சமமான தசம எண் :

(A) $(50)_{10}$

(B) $(72)_{10}$

(C) $(36)_{10}$

(D) ✓ $(99)_{10}$

**32.** The operator precedence for evaluating Boolean expression is :

(A) AND, OR, NOT, Parantheses

(B) ✓ Parantheses, NOT, AND, OR

(C) NOT, AND, OR, Parantheses

(D) OR, AND, NOT, Parantheses

**32.** பூலியன் எண்ணுருக் கோவையை மதிப்பீடு செய்யும் போது செயலி முந்துரிமை வரிசை :

(A) AND, OR, NOT, ( )

(B) ✓ ( ), NOT, AND, OR

(C) NOT, AND, OR, ( )

(D) OR, AND, NOT, ( )

**33.** A binary operator $*$ on a set S is said to be commutative whenever :

(A) ✓ $x*y=y*x$ for all $x, y \in S$

(B) $e*x=x*e = x$ for every $x \in S$

(C) $x*(y \cdot z) = (x*y) \cdot (x*z)$

(D) $x*y = e$

**33.** ஒரு தொகுதி S -ல் உள்ள ஒரு இரும செயலி (binary operator) $*$ எப்போது பரிமாற்று என்று கூறப்படுகிறது ?

(A) ✓ $x*y=y*x$ அனைத்து $x, y \in S$

(B) $e*x=x*e = x$ ஒவ்வொரு $x \in S$

(C) $x*(y \cdot z) = (x*y) \cdot (x*z)$

(D) $x*y = e$

34. The storage elements employed in Clocked Sequential Circuits is called :

(A) Gates

(B) Flip-Flops ✓

(C) Multiplexer

(D) Demultiplexer

34. கடிகார வரிசை முறை சுற்றுகளில் பயன்படுத்தப்படும் சேமிப்பு கூறுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன :

(A) படலைகள் (Gates)

(B) எறிதல்-அணைதல் (Flip-Flops) ✓

(C) பல்கூட்டுச் செலுத்தி (Multiplexer)

(D) ஒருமுகப்படுத்தி (Demultiplexer)

35. The type of memory in which cells can be accessed for information transfer from any desired random location is :

(A) Read Only Memory

(B) Random Access Memory ✓

(C) PROM

(D) EEPROM

35. எந்தவொரு விரும்பிய குறிப்பற்ற இடத்திலிருந்தும் தகவல் பரிமாற்றத் திற்காக செல்களை அணுகக்கூடிய நினைவக வகை :

(A) படிக்கமட்டுமான நினைவகம் (ROM)

(B) குறிப்பின்றி அணுகும் நினைவகம் (RAM) ✓

(C) நிரல்தகு படிக்க மட்டுமான நினைவகம் (PROM)

(D) மின்னோட்டத்தால் அழிக்கக்கூடிய நிரல்தகு படிக்க மட்டுமான நினைவகம் (EEPROM)

36. The instruction which increments the word specified by the effective address in such case, if the incremented value is equal to 0, Program Counter (PC) is incremented by 1 :

(A) BSA

(B) BUN

(C) ISZ ✓

(D) STA

36. எந்த கட்டளை செயலுறு முகவரியால் குறிப்பிடப்பட்ட சொல்லை அதிகரிக்கும் ? அவ்வாறு அதிகரிக்கப்பட்ட மதிப்பு பூஜ்யம் எனில் நிரல் எண்ணியின் (PC) மதிப்பு ஒன்று அதிகரிக்கும் :

(A) BSA

(B) BUN

(C) ISZ ✓

(D) STA

**37.** In magnetic disks, bits are stored in the magnetized surface in spots along concentric circles is called :

(A) Drum

(B) Tracks ✓

(C) Write head

(D) Read head

**37.** காந்த வட்டுகளில் இரில்கள் (bits) காந்தமயமாக்கப்பட்ட மேற்பரப்பில் செறிவூட்டப்பட்ட வட்டங்களின் புள்ளி களில் சேமிக்கப்படுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(A) உருளை (Drum)

(B) தடங்கள் (Tracks) ✓

(C) எழுதும் முனை (Write head)

(D) படிக்கும் முனை (Read head)

**38.** The type of memory used in some large computer systems that permits the user to construct programs as though a large memory space is available, equal to the totality of auxiliary memory is :

(A) Cache memory

(B) Main memory

(C) Virtual memory ✓

(D) Associative memory

**38.** கணினி அமைப்புகளில் பயன்படுத்தப் படும் எந்த நினைவக வகை, துணை நினைவகத் தின் மொத்தத்திற்கு சமமான ஒரு பெரிய நினைவக இடம் கிடைப்பது போல் நிரல்களை உருவாக்க பயனரை அனுமதிக்கிறது :

(A) விரைவு நினைவகம் (Cache memory)

(B) முதன்மை நினைவகம் (Main memory)

(C) மெய்நிகர் நினைவகம் (Virtual memory) ✓

(D) சார்பு நினைவகம் (Associative memory)

**39.** The hexadecimal conversion of the binary number $(10110001101011.11110010)_2$ is :

(A) $(3DE1.A2)_{16}$

(B) $(1C4A.E2)_{16}$

(C) $(2C6B.F2)_{16}$ ✓

(D) $(3A1B.3A)_{16}$

**39.** இரும எண் $(10110001101011.11110010)_2$ இன் பதினாறு அடி எண்முறை மாற்றம் (hexadecimal) :

(A) $(3DE1.A2)_{16}$

(B) $(1C4A.E2)_{16}$

(C) $(2C6B.F2)_{16}$ ✓

(D) $(3A1B.3A)_{16}$

40. A register capable of shifting its binary information in one or both directions is :

(A) Binary counter

✓(B) Shift register

(C) Multiplexer

(D) Demultiplexer

40. எந்த பதிவேடு (Register) அதன் இரும தகவலை ஒன்று அல்லது இரண்டு திசைகளிலும் மாற்றும் திறன் கொண்டது :

(A) இரும கணக்ககம்

✓(B) மாற்றுப்பணி பதிவகம்

(C) ஒருங்கிணைப்பி

(D) ஒருங்கிணைக்கி

41. The bus signal used by the DMA Controller to request the CPU to relinquish the control of buses is :

(A) Bus grant

✓(B) Bus request

(C) RD signal

(D) WR signal

41. DMA கட்டுப்படுத்தியால் CPU -வில் இருந்து பெருவழிகள் (buses) கட்டுப்பாட்டை விட்டு விலக்கிச் செல்லப் பயன்படும் பெருவழிச் சமிக்ஞை எது ?

(A) பெருவழி அனுமதி (Bus grant)

✓(B) பெருவழி கோரிக்கை (Bus request)

(C) RD சமிக்ஞை

(D) WR சமிக்ஞை

42. Identify the term used to define the collection of information stored in the database at a particular moment.

✓(A) Instance of the Database

(B) Data Abstraction

(C) Concurrency

(D) Data Redundancy

42. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தரவுத்தளத்தில் சேமிக்கப்பட்ட தகவல்களின் சேகரிப்பை வரையறுக்கப் பயன்படுத்தப்படும் சொல்லை அடையாளவும் காணவும் :

✓(A) தரவுத்தளத்தின் சான்று

(B) தரவு கருத்துப்பொருள்

(C) ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளல்

(D) தரவு மிகையாக்கம்

**43.** Which is the interface between frontend and backend in a database system ?

(a) SQL

(b) Application Programs

(c) Operating System

(d) Disk Controller

Choose the **correct** answer from the options given below.

(A) ✓ (a) and (b) only

(B) (b) and (c) only

(C) (c) and (d) only

(D) (a) and (c) only

**43.** எது ஒரு தரவுத்தள அமைப்பில் முன் முனை மற்றும் பின்முனைக்கு இடைநிலை யாகும் ?

(a) வடிவமைக்கப்பட்ட வினவு மொழி

(b) பயன்பாட்டு நிரல்கள்

(c) செயற்பாட்டமைப்பு

(d) வட்டுக் கட்டுப்பாட்டுக் கருவி

கீழ்க்காணும் விருப்பங்களில் **சரியான** பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) ✓ (a) மற்றும் (b) மட்டும்

(B) (b) மற்றும் (c) மட்டும்

(C) (c) மற்றும் (d) மட்டும்

(D) (a) மற்றும் (c) மட்டும்

**44.** Identify the term that refers if two Relations $R(A_1, A_2, ...A_n)$ and $S(B_1, B_2, ...B_n)$ have the same degree n and if $dom(A_i) = dom(B_i)$ for $1 \leq i \leq n$.

(A) ✓ Union compatible

(B) Degree incompatible

(C) Union incompatible

(D) Domain incompatible

**44.** இரண்டு தொடர்பு நிலைகள் $R(A_1, A_2, ...A_n)$ மற்றும் $S(B_1, B_2, ...B_n)$ என்ற இரண்டு நிலைகள் ஒரே அளவிலான n பண்புக் கூறுகளை (degree) உடையவையாகவும், ஒவ்வொரு பண்புக்கூறின் மாறிவகை (Domain) ஒரே மாதிரியானதாகவும் இருந்தால் $dom(A_i) = dom(B_i)$ for $1 \leq i \leq n$ அந்த நிலை எதைக் குறிக்கிறது ?

(A) ✓ ஒன்றல் ஏற்புடையது

(B) அளவு ஏற்புடையதல்ல

(C) ஒன்றல் ஏற்புடையதல்ல

(D) செயற்களப்பகுதி ஏற்புடையதல்ல

**45.** The degree of a relationship type/set is defined as :

(A) Number of Attributes

(B) Number of Tables

(C) Number of Tuples

(D) ✓ Number of participating entity types

**45.** ஒரு தொடர்புநிலை வகை/தொகுப்பின் அளவு இவ்வாறு வரையறுக்கப்படுகிறது :

(A) ஏற்பிகளின் எண்ணிக்கை

(B) அட்டவணைகளின் எண்ணிக்கை

(C) ட்யூப்பில்களின் எண்ணிக்கை

(D) ✓ பங்கேற்கும் உட்பொருள் வகைகளின் எண்ணிக்கை

**46.** Which of the following index allows the records of a file to be read in an order that corresponds to the physical order in the file ?

(A) Primary Index ✓

(B) Physical Index

(C) Secondary Index

(D) Record Index

**47.** Identify the state of the system if there exists a set of transactions such that every transaction in the set is waiting for another transaction in the set :

(A) Locking state

(B) Deadlock ✓

(C) Rollback

(D) Normal state

**48.** The ACID property of transactions includes which of the following terms collection ?

(A) Atomicity, Consistency, Isolation, Durability ✓

(B) Access, Commit, Insert, Delete

(C) Atomicity, Concurrency, Independency, Durability

(D) Aggregate, Constraint, Isolate, Domain

**46.** பின்வரும் எந்த குறியீடு ஒரு கோப்பின் பதிவை, கோப்பில் உள்ள பருப்பொருள் வரிசைக்கு (physical order) ஒத்த வரிசையில் படிக்க அனுமதிக்கிறது ?

(A) முதன்மை குறியீடு ✓

(B) பருப்பொருள் குறியீடு

(C) இரண்டாம் நிலை குறியீடு

(D) பதிவு குறியீடு

**47.** தொகுப்பில் உள்ள ஒவ்வொரு பரிவர்த்தனையும் தொகுப்பில் உள்ள மற்றொரு பரிவர்த்தனைக்காகக் காத்திருக்கும் வகையில் பரிவர்த்தனைகள் இருந்தால் அந்த அமைப்பின் நிலையை அடையாளம் காணவும் :

(A) பூட்டுதல் நிலை

(B) முடக்க நிலை ✓

(C) பின்னோட்டம்

(D) சாதாரண நிலை

**48.** பரிவர்த்தனைகளின் ACID பண்புகள் கீழ்காணும் எந்த தொகுப்பை உள்ளடக்கு-கின்றன ?

(A) அணுத்தன்மை, நிலைத்தன்மை, தனிமைப்படுத்தல், நீடித்து உழைக்கும் தன்மை ✓

(B) அணுகல், உறுதி, நுழைவு, நீக்கம்

(C) அணுத்தன்மை, ஒரே நேரத்தில் ஏற்றுக் கொள்ளல், சுயாதீனத்தன்மை, நீடித்து உழைக்கும் தன்மை

(D) திரட்டு, கட்டுப்பாடு, தனிமைப் படுத்தல், செயற்களப்பகுதி

**49.** Name the mechanisms used to grant and revoke privileges in relational database systems and in SQL.

(A) ✓ Discretionary Access Control

(B) Role-based Access Control

(C) Mandatory Access Control

(D) Confidentiality Access Control

**49.** தொடர்புடைய தரவுத்தள அமைப்புகள் மற்றும் வடிவமைக்கப்பட்ட வினவு மொழியில் சலுகைகளை வழங்கவும், ரத்து செய்யவும் பயன்படுத்தப்படும் பொறி முறையை பெயரிடுங்கள்.

(A) ✓ விருப்பமுள்ள அணுகல் கட்டுப்பாடு

(B) பங்கு அடிப்படையிலான அணுகல் கட்டுப்பாடு

(C) கட்டாய அணுகல் கட்டுப்பாடு

(D) இரகசியத்துவ அணுகல் கட்டுப்பாடு

**50.** What is the name of the relation which is not a part of the logical model, but is made visible to a user as a virtual relation ?

(A) File

(B) Physical relation

(C) ✓ View

(D) Table

**50.** தருக்க மாதிரியின் ஒரு பகுதியாக இல்லாத, ஆனால் ஒரு பயனருக்கு மெய்நிகர் தொடர்பு நிலையாக தெரியும்படி செய்யப் படும் தொடர்பு நிலையின் பெயர் என்ன ?

(A) கோப்பு

(B) பருப்பொருள் தொடர்பு

(C) ✓ பார்வை

(D) அட்டவணை

**51.** In synchronization, the receiver retrieves either a valid message or a null.

(A) Blocking receive

(B) Blocking send

(C) ✓ Non blocking receive

(D) Non blocking send

**51.** ஒத்தியங்களில், பெறுநர் அவருக்கு ஒரு செல்லுபடியாகும் செய்தி அல்லது பூஜ்ய செய்தியை மீட்டெடுக்கிறார் :

(A) பெறுவதை தடுப்பது

(B) அனுப்புவதைத் தடுத்தல்

(C) ✓ தடுக்கப்படாத பெறுதல்

(D) தடுக்கப்படாத அனுப்புதல்

52. In critical section problem some of the complexities involved in designing software that addresses the requirements of :

(A) only mutual exclusion
(B) progress requirement
(C) bounded waiting
(D) ✓ mutual exclusion progress and bounded waiting

52. இக்கட்டுநிலை சிக்கலில் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மென்பொருளை வடிவமைப்பதில் உள்ள சில உட்ச் சிக்கல்கள் :

(A) பரஸ்பர விலக்கு மட்டுமே
(B) முன்னேற்றம் தேவை
(C) எல்லைக்குட்பட்ட காத்திருத்தல்
(D) ✓ பரஸ்பர விலக்கல் முன்னேற்றம் மற்றும் வரையறுக்கப்பட்ட காத்திருப்பு

53. In threading the entire process will block if a thread makes a blocking system call :

(A) ✓ Many to one model
(B) One to many model
(C) One to one model
(D) Many to many model

53. ஒரு த்ரெட் (thread), தடுப்பு முறையிலான கணினி அழைப்பைப் பயன்படுத்தும் போது, அந்த த்ரெட் (thread) காரணமாக முழுசெயல்முறையும் தடையுறும் வகை எது ?

(A) ✓ பல - க்கு - ஒரு மாதிரி
(B) ஒன்று - க்கு - பல மாதிரி
(C) ஒன்று - க்கு - ஒரு மாதிரி
(D) பல - க்கு - பல மாதிரி

54. A pointer to the function that is to run as a separate thread :

(A) Pool function
(B) Parallel function
(C) Main function
(D) ✓ LPTHREAD_START_ROUTINE function

54. தனித் த்ரெட் (thread) ஆக இயங்க வேண்டிய செயல்பாட்டிற்கான ஒரு சுட்டிக் காட்டி :

(A) கூட்டிணைப்பு செயல்பாடு
(B) இணை செயல்பாடு
(C) பிரதான செயல்பாடு
(D) ✓ LPTHREAD_START_ROUTINE செயல்பாடு

55. In CPU scheduling when an interrupt occurs a process switches from :

(A) waiting state to the ready state
(B) ✓ running state to the ready state
(C) ready state to the running state
(D) ready state to the waiting state

55. CPU பட்டியலிடலில் ஒரு குறுக்கீடு ஏற்படும் போது ஒரு செயல்முறை கீழ்கண்ட நிலையிலிருந்து மாறுகிறது :

(A) காத்திருக்கும் நிலையில் இருந்து தயார் நிலைக்கு
(B) ✓ இயக்கும் நிலையில் இருந்து தயார் நிலைக்கு
(C) தயார் நிலையிலிருந்து இயக்க நிலைக்கு
(D) தயார் நிலையிலிருந்து காத்திருக்கும் நிலைக்கு

**56.** Allowing a process to specify the subset of processors on which it may run :

(A) Hard affinity ✓

(B) Soft affinity

(C) Process affinity

(D) Processor affinity

**57.** In paging, a Translation Look-aside Buffer contains :

(A) Logical Address

(B) Physical Address

(C) Page number and Frame number ✓

(D) Logical address and Physical address

**58.** In Page replacement, Replace the Page that will not be used for the longest period of time in :

(A) Basic Page Replacement

(B) Optimal Page Replacement ✓

(C) FIFO Page Replacement

(D) LRU Page Replacement

**56.** ஒரு செயல்முறை அது இயங்கக்கூடிய செயலிகளின் துணைக் குழுவைக் குறிப்பிட அனுமதிப்பது :

(A) கடினமாக தொடர்பியல்பு ✓

(B) மென்மையான தொடர்பியல்பு

(C) செயல்முறை தொடர்பியல்பு

(D) செயலி தொடர்பியல்பு

**57.** பக்கக் குறியீட்டு முறையில், மொழி பெயர்ப்புப் பார்வை இடையகம் எதைக் கொண்டிருக்கும் ?

(A) தருக்க முகவரி

(B) பருப்பொருள் முகவரி

(C) பக்க எண் மற்றும் சட்டக எண் ✓

(D) தருக்க முகவரி மற்றும் பருப்பொருள் முகவரி

**58.** பக்கம் மாற்றும் முறையில் நீண்ட காலம் பயன்படுத்தப்படாத பக்கத்தை மாற்றும் முறை :

(A) அடிப்படை பக்க மாற்றீடு

(B) உகந்த பக்க மாற்றீடு ✓

(C) FIFO பக்க மாற்றீடு

(D) LRU பக்க மாற்றீடு

**59.** In windows API, to establish a memory mapped file in shared memory, which of the following sequence is **correct** ?

(a) CreateFile( ) function

(b) MapViewOfFile( ) function

(c) CreateFileMapping( ) function

(A) (a) → (b) → (c)

(B) (b) → (a) → (c)

(C) ✓ (a) → (c) → (b)

(D) (c) → (a) → (b)

**59.** Windows API -யில், நினைவக வரைபட கோப்புகளை பகிரப்பட்ட நினைவகத்தில் நிறுவ, கீழ்க்காணும் செயல்முறைகளின் **சரியான** வரிசை எது ?

(a) CreateFile( ) செயல்பாடு

(b) MapViewOfFile( ) செயல்பாடு

(c) CreateFileMapping( ) செயல்பாடு

(A) (a) → (b) → (c)

(B) (b) → (a) → (c)

(C) ✓ (a) → (c) → (b)

(D) (c) → (a) → (b)

**60.** Main advantages of using assembly language rather than machine language :

(a) It is mnemonic

(b) Addresses are symbolic, not absolute

(c) Reading is easier

(d) Introduction of data to program is easier

(A) (a) and (b) only

(B) (b) and (c) only

(C) (c) and (d) only

(D) ✓ (a), (b), (c) and (d)

**60.** இயந்திர மொழியை விட தொகுப்பு மொழியைப் பயன்படுத்துவதன் முக்கிய நன்மைகள் :

(a) இது நினைவூட்டு வாசகம் (Mnemonic)

(b) குறியாள முகவரிகள், தனிமுகவரி அல்ல

(c) படிக்க எளிதாக இருக்கும்

(d) நிரலில் தரவை அறிமுகப்படுத்துவது எளிதானது

(A) (a) மற்றும் (b) மட்டும்

(B) (b) மற்றும் (c) மட்டும்

(C) (c) மற்றும் (d) மட்டும்

(D) ✓ (a), (b), (c), (d)

**61.** Using Huffman's algorithm on a forest of binary tree will generate :

(A) infix code

(B) ✓ prefix code

(C) postfix code

(D) gray code

**61.** இருமமுறை மரங்களின் காடுகளில் ஹஃப்மேன் நெறிமுறையை பயன்படுத்து வதன் மூலம் கீழ்கண்டவற்றில் எது உருவாகும் ?

(A) இடை குறியீடு

(B) ✓ முன்னொட்டு குறியீடு

(C) பின்னொட்டு குறியீடு

(D) சாம்பல் நிறக் குறியீடு

**62.** An AVL Tree is :

(A) A binary tree with a balanced condition

(B) A binary tree with an unbalanced condition

(C) ✓ A binary search tree with a balanced condition

(D) A binary search tree with an unbalanced condition

**62.** ஒரு ஏ.வி.எல் மரம் என்பது :

(A) ஒரு சமநிலையான நிலையுடன் கூடிய ஒரு இரும மரம்

(B) ஒரு சமநிலை இல்லாத இரும மரம்

(C) ✓ ஒரு சமநிலையான நிலையுடன் கூடிய இரும தேடல் மரம்

(D) ஒரு சமநிலையற்ற நிலையைக் கொண்ட ஒரு இரும தேடல் மரம்

**63.** External hashing allows the set to be stored in a :

(A) ✓ Potentially unlimited space

(B) Potentially limited space

(C) Statically unlimited space

(D) Statically limited space

**63.** வெளிப்புற ஹாஸிங் தொகுப்பை __________ இல் சேமிக்க அனுமதிக்கிறது.

(A) ✓ சாத்தியமான வரம்பற்ற இடம்

(B) சாத்தியமான வரையறுக்கபட்ட இடம்

(C) நிலையான வரம்பற்ற இடம்

(D) நிலையான வரையறுக்கப்பட்ட இடம்

**64.** The process of executing a correct program on data sets and measuring the time and space it takes to compute the results is called :

(A) editing

(B) compiling

(C) debugging

(D) ✓ profiling

**64.** தரவுத் தொகுப்புகளில் சரியான நிரலைச் செயல்படுத்தி, முடிவுகளைக் கணக்கிட எடுக்கும் நேரம் மற்றும் இடத்தை அளவிடும் செயல்முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

(A) பதிப்பித்தல் (editing)

(B) தொகுத்தல் (compiling)

(C) பிழை நீக்கம் (debugging)

(D) ✓ விவரக் குறிப்பு (profiling)

**65.** The worst case time complexity for sequential search algorithm with 'n' values is :

(A) ✓ O(n)
(B) O($n^2$)
(C) O($n^3$)
(D) O(2n)

**65.** 'n' மதிப்புகளைக் கொண்ட தொடர் தேடல் நெறிமுறைக்கான மோசமான நேர சிக்கலானது :

(A) ✓ O(n)
(B) O($n^2$)
(C) O($n^3$)
(D) O(2n)

**66.** A dead node is a generated node :

(A) ✓ which is not to be expanded further or all of whose children have been generated.
(B) which is not having any value.
(C) which is not to be expanded further or all of whose children have not been generated.
(D) which can be expanded further or all of whose children have been generated.

**66.** இறந்த முனை (node) என்பது உருவாக்கப் பட்ட முனை (node) ஆகும். அவை __________.

(A) ✓ மேலும் விரிவாக்கப்பட வேண்டிய தல்ல அல்லது அதனுடைய அனைத்து குழந்தைகளுக்கும் உருவாக்கப்பட்டவை.
(B) எந்த மதிப்பையும் கொண்டிராதது.
(C) மேலும் விரிவாக்கப்பட வேண்டிய-தல்ல அல்லது அதனுடைய அனைத்து குழந்தைகளும் உருவாக்கப்படா-தவை.
(D) மேலும் விரிவாக்கக்கூடியது அல்லது அதனுடைய அனைத்து குழந்தை-களும் உருவாக்கப்பட்டவை.

**67.** Bounding functions are used :

(A) ✓ to help avoid the generation of subtrees that do not contain an answer node.
(B) to help the generation of subtrees that do not contain an answer node.
(C) to help avoid the generation of subtrees that contains answer node
(D) to help the generation of subtrees that contains answer node

**67.** எல்லைப்படுத்தும் செயல்பாடுகள் பயன்-படுத்தபடுகின்றன :

(A) ✓ பதில் முனை இல்லாத துணை மரங்களை உருவாக்குவதை தவிர்க்க உதவும்.
(B) பதில் முனை இல்லாத துணை மரங்களை உருவாக்க உதவுதல்
(C) பதில் முனையைக் கொண்ட துணை மரங்கள் உருவாவதைத் தவிர்க்க உதவும்
(D) பதில் முனையைக் கொண்ட துணை மரங்களை உருவாக்க உதவுவதற்காக

68. An algorithm for a problem that almost always generates optimal solutions are called :

(A) ✓ Probabilistically good algorithm
(B) Randomly good algorithm
(C) Probabilistically bad algorithm
(D) Randomly bad algorithm

68. எப்போதும் ஒரு சிக்கலுக்கான உகந்த தீர்வுகளை உருவாக்கும் ஒரு நெறிமுறை இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(A) ✓ நிகழ்தகவு ரீதியாக நல்ல நெறிமுறை
(B) தோராயமாக நல்ல நெறிமுறை
(C) நிகழ்தகவு ரீதியாக மோசமான நெறிமுறை
(D) சீரற்ற முறையில் மோசமான நெறிமுறை

69. A Planar Graph is :

(A) ✓ a graph which can be drawn in a plane in such a way that no two edges cross each other
(B) a graph which can be drawn in a plane but two edges cross each other in the graph
(C) a graph which can't be drawn in a plane
(D) a graph in which two edges cross each other

69. ஒரு சமதள வரைபடம் என்பது :

(A) ✓ இரண்டு விளிம்புகள் ஒன்றை ஒன்று கடக்காத வகையில் ஒரு தளத்தில் வரையக்கூடிய வரைபடம்.
(B) ஒரு தளத்தில் வரையக்கூடிய ஒரு வரைபடம், ஆனால் வரைபடத்தில் இரண்டு விளிம்புகள் ஒன்றையொன்று கடக்கின்றன.
(C) ஒரு தளத்தில் வரைய முடியாத வரைபடம்.
(D) இரண்டு விளிம்புகள் ஒன்றையொன்று கடக்கும் வரைபடம்.

70. For a noiseless channel, the Nyquist bit rate formula defines the theoretical maximum bit rate :

(A) Bit rate $= \frac{1}{2} \times$ bandwidth $\times \text{Log}_2\text{L}$
(B) ✓ Bit rate $= 2 \times$ bandwidth $\times \text{Log}_2\text{L}$
(C) Bit rate $=$ bandwidth $\times \text{Log}_2\text{L}$
(D) Bit rate $= 2 \times$ bandwidth

70. ஒரு சத்தமில்லாத தடத்திற்கு நிக்விஸ்ட் இரும இலக்க (bit) வீத சூத்திரம் கோட்பாடு அதிகபட்ச இரும இலக்க (bit) வீதத்தை வரையறுக்கிறது :

(A) இரும இலக்க வீதம் (bit rate) $= \frac{1}{2} \times$ அலைவரிசை $\times \text{Log}_2\text{L}$
(B) ✓ இரும இலக்க வீதம் (bit rate) $= 2 \times$ அலைவரிசை $\times \text{Log}_2\text{L}$
(C) இரும இலக்க வீதம் (bit rate) $=$ அலைவரிசை $\times \text{Log}_2\text{L}$
(D) இரும இலக்க வீதம் (bit rate) $= 2 \times$ அலைவரிசை

**71.** A network with bandwidth of 10 Mbps can pass only an average of 12,000 frames per minute with each frame carrying an average of 10,000 bits. What is the throughput of this network ?

(A) 2 Mbps
(B) 1 Mbps
(C) 0.5 Mbps
(D) 0.25 Mbps

**72.** What are the propagation time and the transmission time for a 5-Mbyte message (an image) if the bandwidth of the network is 1 Mbps ? Assume that the distance between the sender and the receiver is 12,000 km and that light travels at $2.4 \times 10^8$ m/s.

(A) Propagation time = 50 ms Transmission time = 40 s
(B) Propagation time = 2 ms Transmission time = 40 s
(C) Propagation time = 50 ms Transmission time = 0.020 ms
(D) Propagation time = 2 ms Transmission time = 0.020 ms

**73.** The channel bandwidth is divided into many subcarriers that independently send data is :

(A) Time Division Multiplexing
(B) Orthogonal Frequency Division Multiplexing
(C) Frequency Division Multiplexing
(D) Statistical Time Division Multiplexing

**71.** 10 Mbps அலைவரிசை கொண்ட ஒரு பின்னகம் (network) நிமிடத்திற்கு சராசரியாக 12,000 சட்டகங்களை மட்டுமே அனுப்ப முடியும், ஒவ்வொரு சட்டகமும் சராசரியாக 10,000 இரும இலக்கங்களை (bits) கொண்டுள்ளது. கட்டமைப்பின் முழுவதும் செல்லல் என்ன ?

(A) 2 Mbps
(B) 1 Mbps
(C) 0.5 Mbps
(D) 0.25 Mbps

**72.** கட்டமைப்பின் அலைவரிசை 1 Mbps ஆக இருந்தால் 5-Mbyte செய்தியின் (ஒரு படம்) பரப்புதல் நேரம் மற்றும் பரிமாற்ற நேரம் என்ன ? அனுப்புநருக்கும், பெறுநருக்கும் இடையிலான தூரம் 12,000 கி.மீ. என்றும், ஒளி $2.4 \times 10^8$ மீ/செகண்ட் இல் பயணிக்கிறது என்றும் வைத்துக் கொள்ளுங்கள்.

(A) பரப்புதல் நேரம் = 50 ms பரிமாற்ற நேரம் = 40 s
(B) பரப்புதல் நேரம் = 2 ms பரிமாற்ற நேரம் = 40 s
(C) பரப்புதல் நேரம் = 50 ms பரிமாற்ற நேரம் = 0.020 ms
(D) பரப்புதல் நேரம் = 2 ms பரிமாற்ற நேரம் = 0.020 ms

**73.** தட அலைவரிசை பல துணை தாங்கி களாகப் பிரிக்கப்பட்டு அவை சுயாதீனமாக தரவை அனுப்புகின்றன, எனில் அது :

(A) காலப் பிரிவு பல்வழி தகவல் தரு முறை
(B) செங்குத்து அலைவெண் பிரிவினைப் பன்முகமாக்கல்
(C) அலைவெண் பிரிவினைப் பன்முக-மாக்கல்
(D) புள்ளி விவர காலப்பிரிவு பல்வழி தகவல் தருமுறை

**74.** Every device has a dedicated point-to-point link to every other device :

(A) Mesh Topology ✓

(B) Star Topology

(C) Ring Topology

(D) Bus Topology

**74.** ஒவ்வொரு சாதனமும் மற்ற ஒவ்வொரு சாதனத்திற்கும் ஒரு பிரத்யேக நேரடி இணைப்பைக் கொண்டுள்ளது.

(A) வலை கண்ணி இடத்தியல் ✓

(B) நட்சத்திர இடத்தியல்

(C) வளைய இடத்தியல்

(D) பெருவழி இடத்தியல்

**75.** The passing of data and network information down through the layers of the sending device and back-up through the layers of the receiving device is made possible by __________ between each pair of adjacent layers.

(A) A Higher layer

(B) A Middle layer

(C) An Interface ✓

(D) A Lower layer

**75.** அனுப்பும் சாதனத்தின் அடுக்குகள் வழியாக தரவு மற்றும் நெட்வொர்க் தகவல் களைக் கடத்துவதும் பெறும் சாதனங்-களின் அடுக்குகள் வழியாக காப்புப் பிரதி எடுப்பதும் ஒவ்வொரு ஜோடி அருகிலுள்ள அடுக்குகளுக்கும் இடையில் __________ மூலம் சாத்தியமாகும்.

(A) ஒரு உயர் அடுக்கு

(B) ஒரு நடுத்தர அடுக்கு

(C) ஒரு இடைமுகம் ✓

(D) ஒரு கீழ் அடுக்கு

**76.** The data link layer divides the stream of bits received from the network layer into manageable data units is called __________.

(A) Data rate

(B) Encapsulation

(C) Frames ✓

(D) Segmentation

**76.** தரவு இணைப்பு அடுக்கு, கட்டமைப்பு அடுக்கிலிருந்து பெறப்பட்ட இரும இலக்கங்களின் சரத்தினை நிர்வகிக்கக் கூடிய தரவு அலகுகளாக இது பிரிக்கிறது.

(A) தரவு விகிதம்

(B) பொதி உறையாக்கம்

(C) சட்டகங்கள் ✓

(D) பிரித்தல்

**77.** The layer which is responsible for the source-to-destination delivery of a packet, possibly across multiple networks is __________.

(A) Physical Layer

✓(B) Network Layer

(C) Data link Layer

(D) Transport Layer

**77.** பன்ம பின்னகம் (multiple network) ஒரு பொதிவை மூலத்திலிருந்து இலக்குக்கு வழங்குவதற்கு பொறுப்பான அடுக்கு __________.

(A) பருப்பொருள் அடுக்கு

✓(B) பின்னக (Network) அடுக்கு

(C) தரவு இணைப்பு அடுக்கு

(D) போக்குவரத்து அடுக்கு

**78.** Protocols in which stations listen for a carrier (a transmission) and act accordingly is __________.

(A) Transmission Control Protocols

(B) Internet Protocols

✓(C) Carrier Sense Protocols

(D) User Datagram Protocols

**78.** நிலையங்கள் ஒரு தாங்கியை (ஒரு பரிமாற்றம்) கேட்டு அதற்கேற்ப செயல் படும் விதிமுறைத் தொகுப்புகள் :

(A) பரிமாற்ற கட்டுப்பாட்டு விதிமுறைத் தொகுப்பு

(B) இணைய விதிமுறைத் தொகுப்பு

✓(C) தாங்கி உணர்வுத்திறன் விதிமுறைத் தொகுப்பு

(D) பயனர் தகவல் செய்தி விதிமுறைத் தொகுப்பு

**79.** Identify the method in which the stations in a network are organized in a logical ring, (i.e.) for each station, there is a predecessor (the station which is logically before the station in the ring) and a successor (the station which is after the station in the ring).

✓(A) Token Passing

(B) Polling

(C) Reservation

(D) Contention Window

**79.** ஒரு பின்னகத்தில் (network) உள்ள நிலையங்கள் ஒரு தருக்க வளையத்தில் அதாவது, ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு முன்னோடி (வளையத்தில் உள்ள நிலையத்திற்கு தர்க்க ரீதியாக முன் இருக்கும் நிலையம்) மற்றும் ஒரு வாரிசு (வளையத்தில் உள்ள நிலையத்திற்குப் பிறகு இருக்கும் நிலையம்) உள்ளவாறு ஒருங்கமைக்கும் முறையை அடையாளம் காணவும்.

✓(A) அடையாள வில்லை அனுப்புதல்

(B) நேரிப் பதிவு

(C) இடஒதுக்கீடு

(D) கன்டென்சன் சாளரம்

80. The whole network is considered one LAN, but the portions of the network separated by repeaters are called __________.

(A) Passive Hubs

(B) Active Hubs

(C) Segments

(D) Bridges

81. A way to bind the data and its associated function together is called :

(A) Object

(B) Structure

(C) Class

(D) Inheritance

82. A member function guarantees that it will never modify any of its class's member data.

(A) friend function

(B) const member function

(C) const data member

(D) private member function

83. In the following declaration, how many character creates an array in C++ ?

char num[ ]=''one'' ;

(A) FOUR

(B) THREE

(C) FIVE

(D) ONE

80. முழு பின்னகம் (Network) ஒன்றை ஒரு LAN எனக் கருதினாலும், ரிப்பீட்டர் களால் பிரிக்கப்பட்ட பகுதிகள் __________ என அழைக்கப்படுகின்றன.

(A) மந்த முனைகள்

(B) இயங்கும் முனைகள்

(C) பிரிவுகள்

(D) இணைப்பான்கள்

81. தரவு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளை ஒன்றாக பிணைக்கும் ஒரு வழி __________ என்று அழைக்கப் படுகிறது.

(A) பொருள் (Object)

(B) கட்டமைப்பு (Structure)

(C) வகுப்பு (Class)

(D) மரபுவழி (Inheritance)

82. எந்த ஒரு உறுப்பினர் செயல்முறை, அதன் வகுப்பு உறுப்பினர் தரவை ஒருபோதும் மாற்றாது என்பதை உறுதி செய்கிறது ?

(A) friend செயல்முறை

(B) const உறுப்பினர் செயல்முறை

(C) const தரவு உறுப்பினர் (member)

(D) private உறுப்பினர் செயல்முறை

83. C++ இன் கீழ்கண்ட அறிவிப்பில் எத்தனை எழுத்துகள் ஒரு வரிசையை உருவாக்கு கின்றன ?

char num[ ]=''one'' ;

(A) நான்கு

(B) மூன்று

(C) ஐந்து

(D) ஒன்று

**84.** Major features that are required for object based programming :

(a) Data Encapsulation

(b) Data hiding and access mechanism

(c) Inheritance

(d) Operator Overloading

Choose the **correct** answer from the options given below :

(A) (a), (b) and (d) only

(B) (a), (b) and (c) only

(C) (a), (c) and (d) only

(D) (b), (c) and (d) only

**84.** பொருள் சார்ந்த நிரலாக்கத்திற்குத் தேவையான முக்கிய அம்சங்கள் :

(a) தரவு பொதிவுறையாக்கம்

(b) தரவு மறைத்தல் மற்றும் அணுகல் வழிமுறை

(c) மரபுவழி

(d) இயக்கர் அதிகப்பளு ஏற்றல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களிலிருந்து **சரியான** பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) (a), (b) மற்றும் (d) மட்டும்

(B) (a), (b) மற்றும் (c) மட்டும்

(C) (a), (c) மற்றும் (d) மட்டும்

(D) (b), (c) மற்றும் (d) மட்டும்

**85.** What is the default integer value of "red" in the following syntax enumerator datatype ?
enum colour {red, blue=4, green=8 } ;

(A) 3

(B) 0

(C) 1

(D) 5

**85.** பின்வரும் enumerator தரவு வகையில் "red" இன் இயல்புநிலை முழு எண் மதிப்பு என்ன ?
enum colour {red, blue=4, green=8 } ;

(A) 3

(B) 0

(C) 1

(D) 5

**86.** A variable is given one value if something is true and another value if its false.

(A) Logical operator

(B) Arithmetic operator

(C) Unary operator

(D) Conditional operator

**86.** ஒரு மாறி உண்மையாக இருந்தால் அதற்கு ஒரு மதிப்பும், அது பொய்யாக இருந்தால் மற்றொரு மதிப்பும் வழங்கப்படும்.

(A) தர்க்க இயக்கர்

(B) எண்கணித இயக்கர்

(C) ஒரும இயக்கர்

(D) நிபந்தனை இயக்கர்

**87.** Which one is illegal of functions declaration with default argument value ?

(A) int mul(int i, int j = 5, int k = 10) ;

(B) int mul(int i = 0, int j, int k = 10) ;

(C) int mul(int i = 2, int j = 5, int k = 10) ;

(D) int mul(int i, int j, int k = 10) ;

**87.** முன்னிருப்பு மதிப்புரு மதிப்புடன் கூடிய செயல்முறை அறிவிக்கையில் எது சட்டவிரோதமானது ?

(A) int mul(int i, int j = 5, int k = 10) ;

(B) int mul(int i = 0, int j, int k = 10) ;

(C) int mul(int i = 2, int j = 5, int k = 10) ;

(D) int mul(int i, int j, int k = 10) ;

**88.** A program that accept a program written in a high level language and produces an object program :

(A) Compiler

(B) Interpreter

(C) Assembler

(D) Preprocessor

**88.** உயர்மட்ட மொழியில் எழுதப்பட்ட ஒரு நிரலை ஏற்றுக்கொண்டு ஒரு பொருளை உருவாக்கும் ஒரு நிரல் :

(A) தொகுப்பி

(B) வரி மொழி மாற்றி

(C) இணைப்பி

(D) முன்செய்முறைப்படுத்தி

**89.** The association of an attribute of a program entity with a value is defined as __________.

(A) Binding time

(B) Compile time

(C) Run time

(D) Binding

**89.** ஒரு செயல்முறை உட்பொருள் ஏற்பியின் மதிப்புடன் தொடர்புபடுத்தப்படுவது இவ்வாறு வரையறுக்கப்படுகிறது.

(A) சேர்க்கும் நேரம்

(B) தொகுக்கும் நேரம்

(C) ஓட்ட நேரம்

(D) பிணைத்தல்

**90.** Call back function is also known as :

(A) Pointer to object

(B) Array of pointer

(C) Pointer to pointer

(D) Pointer to function

**90.** மீண்டும் அழைக்கும் செயல்முறை __________ என்றும் அழைக்கப்படுகிறது.

(A) சுட்டிலிருந்து பொருளுக்கு

(B) வரிசை அணியிலிருந்து சுட்டிக்கு

(C) சுட்டிலிருந்து சுட்டுக்கு

(D) சுட்டிலிருந்து செயல்முறைக்கு

**91.** Functions are designed for handling a single character at a time in a sequential file input and output operation.

(A) putc( ) and getc( )

(B) read( ) and write( )

(C) ✓ put( ) and get( )

(D) seekg( ) and tellg( )

**91.** தொடர்ச்சியான கோப்புகள் மற்றும் வெளியீட்டு செயல்பாட்டில் ஒரே நேரத்தில் ஒரு எழுத்தைக் கையாள செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

(A) putc( ) மற்றும் getc( )

(B) read( ) மற்றும் write( )

(C) ✓ put( ) மற்றும் get( )

(D) seekg( ) மற்றும் tellg( )

**92.** The window that provides the Python to execute in interactive mode is called :

(A) Interactive Window

(B) ✓ Python Shell

(C) Window

(D) DOS-prompt

**92.** ஊடாடும் பயன்முறையில் பைத்தானை இயக்க அனுமதிக்கும் சாளரம் இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(A) இடைப்பரிமாற்ற சாளரம்

(B) ✓ பைத்தான் Shell

(C) சாளரம்

(D) DOS நினைவுக் குறிப்பு

**93.** What value does the following expression evaluate to according to the operator precedence rule of Python ?

exp=4 + 2**5 || 10

(A) 6.7

(B) 7.1

(C) 7.3

(D) ✓ 7.0

**93.** பைத்தானின் இயக்குபவர் முந்துரிமை விதியின்படி பின்வரும் எண்ணுறு கோவை எந்த மதிப்பை மதிப்பிடுகிறது ?

exp=4 + 2**5 || 10

(A) 6.7

(B) 7.1

(C) 7.3

(D) ✓ 7.0

**94.** Which one of the following method is used to select first 5 rows of a pandas dataframe ?

(A) ✓ frame.head( )

(B) dataframe.top( )

(C) dataframe.first( )

(D) dataframe.header( )

**94.** pandas தரவுச் சட்டத்தின் முதல் 5 வரிசைகளைத் தேர்ந்தெடுக்க பின்வரும் முறைகளில் எது பயன்படுத்தப்படுகிறது ?

(A) ✓ frame.head( )

(B) dataframe.top( )

(C) dataframe.first( )

(D) dataframe.header( )

95. In Python programming what operator is used to concatenate two strings a, b ?

(A) a * b

(B) a + b

(C) a # b

(D) a & b

95. Python நிரலாக்கத்தில், இரண்டு சரம் (strings) a மற்றும் b ஐ ஒன்றாக இணைக்க (concatenate) பயன்படுத்தப்படும் செய் முறைக்குறி :

(A) a * b

(B) a + b

(C) a # b

(D) a & b

96. What will be the output of the following Python code ?

```
S="Goodbye"
print(S.find('l'))
```

(A) −2

(B) 0

(C) −1

(D) 1

96. பின்வரும் பைதான் குறியீட்டின் வெளியீடு என்னவாக இருக்கும் ?

```
S="Goodbye"
print(S.find('l'))
```

(A) −2

(B) 0

(C) −1

(D) 1

97. What is the purpose of Scipy.linalg ?

(A) Probability Distributions

(B) Linear Algebra Routines and Matrix Decomposition

(C) Numerical Integration Routines

(D) Function Optimizing

97. Scipy.linalg -ன் நோக்கம் என்ன ?

(A) நிகழ்தகவு பரவல்கள்

(B) நேரியல் இயற்கணித நடைமுறைகள் மற்றும் அணி சிதைவு

(C) எண்ணியல் ஒருங்கிணைப்பு நடை முறைகள்

(D) செயல்பாட்டை மேம்படுத்தல்

98. Explicit conversion of operands to a specific type is called as :

(A) Operand changing

(B) Automatic conversion

(C) Type conversion

(D) Coercion

98. குறிப்பிட்ட வகைக்கு இயக்கப்பொருள் வெளிப்படையாக மாற்றுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) இயக்கப்பொருள் மாற்றல்

(B) தானியங்கி மாற்றம்

(C) வகை மாற்றம்

(D) வலிந்த மாற்றம்

99. Which among the following data structure in Python uses Key-value pair to store data ?

(A) Lists

(B) Strings

(C) Array

(D) Dictionary

99. பைதானில் கீழ்காணும் தரவமைப்புகளில் எது, தரவுகளை சேமிக்க விசை-மதிப்பு (Key-value) ஜோடியைப் பயன்படுத்து-கிறது ?

(A) பட்டியல்கள்

(B) சரங்கள்

(C) வரிசை

(D) அகராதி

100. What will be the output of the following code in Python ?

print(dict( (i, i * * 2) for i in range(5) ) )

(A) { 0 : 0, 1 : 1, 2 : 4, 3 : 9, 4 : 16 }

(B) { 0 : 0, 1 : 2, 2 : 4, 3 : 6, 4 : 8 }

(C) { 0 : 1, 1 : 1, 2 : 2, 3 : 3, 4 : 4 }

(D) { 1 : 1, 2 : 2, 3 : 6, 4 : 8, 5 : 10 }

100. பைத்தானில் பின்வரும் குறியீட்டின் வெளியீடு என்னவாக இருக்கும் ?

print(dict( (i, i * * 2) for i in range(5) ) )

(A) { 0 : 0, 1 : 1, 2 : 4, 3 : 9, 4 : 16 }

(B) { 0 : 0, 1 : 2, 2 : 4, 3 : 6, 4 : 8 }

(C) { 0 : 1, 1 : 1, 2 : 2, 3 : 3, 4 : 4 }

(D) { 1 : 1, 2 : 2, 3 : 6, 4 : 8, 5 : 10 }

101. The OSI Layer which offer various services, including dialog control, token management and synchronization is ___________.

(A) Session Layer

(B) Network Layer

(C) Data link Layer

(D) Transport Layer

101. உரையாடல் கட்டுப்பாடு, அடையாள வில்லை மேலாண்மை மற்றும் ஒத்திசைவு உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கும் OSI அடுக்கு :

(A) அமர்வு அடுக்கு

(B) பின்னக அடுக்கு

(C) தரவு இணைப்பு அடுக்கு

(D) போக்குவரத்து அடுக்கு

**102.** Combination of the best properties of contention and collision free protocols, arriving at a new protocol that used contention at low load to provide low delay, but used a collision-free technique at high load to provide good channel efficiency. It is __________.

(A) Binary Countdown

✓(B) Limited-Contention protocols

(C) Resilient Packet Ring

(D) Reservation Protocols

**102.** சர்ச்சை மற்றும் மோதல் இல்லாத நெறிமுறைகளின் சிறந்த பண்புகளின் கலவை, குறைந்த தாமதத்தை வழங்க குறைந்த சுமையில் சர்ச்சையைப் பயன்படுத்தும் ஒரு புதிய நெறிமுறையை அடைகிறது, ஆனால் நல்ல சேனல் செயல்திறனை வழங்க அதிக சுமையில் மோதல் இல்லாத நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. இது __________.

(A) இரும இறங்குமுறை கணிப்பு

✓(B) வரையறுக்கப்பட்ட சர்ச்சை நெறி முறைகள்

(C) நெகிழ்திறன் கொண்ட பொதிவு வளையம்

(D) முன்பதிவு நெறிமுறைகள்

**103.** Identify the more complex and powerful protocol to handle the transmission of electronic mail.

✓(A) Internet Mail Access Protocol, Version 4 (IMAP4)

(B) Post Office Protocol, Version 3 (POP3)

(C) Simple Mail Transfer Protocol (SMTP)

(D) File Transfer Protocol (FTP)

**103.** மின்னஞ்சல் பரிமாற்றத்தை கையாள அதிக சிக்கலானதும் சக்திவாய்ந்ததும் ஆன நெறிமுறையை அடையாளம் காணவும் :

✓(A) இணைய அஞ்சல் அணுகல் நெறி-முறை, பதிப்பு 4 (IMAP4)

(B) அஞ்சல் அலுவலக நெறிமுறை, பதிப்பு 3 (POP3)

(C) எளிய அஞ்சல் பரிமாற்ற நெறி-முறை (SMTP)

(D) கோப்பு பரிமாற்ற நெறிமுறை (FTP)

**104.** Which of the following is the standard mechanism provided by TCP/IP for copying a file from one host to another ?

✓(A) File Transfer Protocol (FTP)

(B) Post Office Protocol, Version 3 (POP3)

(C) Internet Mail Access Protocol, Version 4 (IMAP4)

(D) Simple Mail Transfer Protocol (SMTP)

**104.** ஒரு ஹோஸ்டிலிருந்து மற்றொரு ஹோஸ்டுக்கு கோப்புகளை நகலெடுக்க TCP/IP வழங்கும் நிலையான வழிமுறை பின்வருவனவற்றில் எது?

✓(A) கோப்பு பரிமாற்ற நெறிமுறை (FTP)

(B) அஞ்சல் அலுவலக நெறிமுறை, பதிப்பு 3 (POP3)

(C) இணைய அஞ்சல் அணுகல் நெறி-முறை, பதிப்பு 4 (IMAP4)

(D) எளிய அஞ்சல் பரிமாற்ற நெறிமுறை (SMTP)

**105.** A member function that is executed automatically whenever an object is created :

(A) Static function

(B) Member function

(C) Constructor function

(D) Private member function

**105.** ஒரு பொருள் உருவாக்கப்படும் போதெல்லாம் தானாகவே செயல்படுத்தப்படும் ஒரு உறுப்பினர் செயல்பாடு :

(A) Static செயல்பாடு

(B) உறுப்புச் செயல்பாடு

(C) Constructor செயல்பாடு

(D) Private உறுப்புச் செயல்பாடு

**106.** Which of the following is **TRUE** ?

(A) A private member of a class cannot be inherited either in public mode or in private mode.

(B) A private member of a class can be inherited in public mode.

(C) A private member of a class can be inherited in private mode.

(D) A private member of a class can be inherited in public mode but cannot in private mode.

**106.** பின்வருவனவற்றில் எது **உண்மை** ?

(A) ஒரு வகுப்பின் தனிப்பட்ட உறுப்பினரை, பொது பயன்முறையிலும் தனிப்பட்ட பயன் முறையிலும் மரபுரிமை மூலம் பெற முடியாது.

(B) ஒரு வகுப்பின் தனிப்பட்ட உறுப்பினரை, பொது பயன்முறையிலோ அல்லது தனிப்பட்ட பயன் முறையிலோ மரபுரிமையாக பெற முடியும்.

(C) ஒரு வகுப்பின் தனிப்பட்ட உறுப்பினரை தனிப்பட்ட பயன் முறையில் மரபுரிமையாக பெற முடியும்.

